**வண்ணாத்தவில்லுவ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வண்ணாத்தவில்லுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று (முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான வண்ணாத்தவில்லுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு (பொருத்தமானவாறு) இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பபை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்க்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வாகன சேவை நிலையத்தில் 06 விடயங்களில் 36 பொருட்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 153,600 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நாநேட்டு பதிவுகள் மூலம் திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சுகாதார வசதகளை முன்னேற்றும் செயற்திட்டங்கள் பூர்த்தியாக்க முன்னர் நிலையான சொத்தக்களின் கீழ் ரூபா 596,200 ஆன தொகை கணக்கீடு செய்யக்கிருந்தது பின்னர் நிலையான சொத்தக்கள் அதே பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,946,076 பெறுமதியாக கணக்கு விடயம் பௌதீக உள்ள தன்மை, பட்டியல்கள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சான்றுகள் சமர்ப்பிக்காமையா கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பெறுமதிகளை மெய்மையாய்வு செய்ய கூடியவாறு ஆவணச் சான்றுகளை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுகடகான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி.571(2) | 02 ஆண்டுகளிற்கு மேலாக இருந்த ரூபா 184,446 ஆன வைப்புக்கள் தொடர்பில் பிரமாணங்களில் குறிப்பிட்டவாறு செயற்பாடுகள் செய்யப் பட்டிருக்கவில்லை. | வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | பிரமாணங்களின் பிரகாரம் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | | |
| | (i) விதி இல. 59 | ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் வருமான பரிசோதகர்/ நிரவாக உத்தியோகத்தர் அல்லது கைத்தொழில் / வியாபாரம் பற்றிய செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பிரதேச சபை பகுதியில் அளவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் இதன்படி செயற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அளவைகள் நடாததப்படும் | விதிகளின் பிரகாரம் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.. |
| | (ii) விதி இல. 218 | பிரதேச சபையான் பயன்படுத்தப்பட்ட வசித்துவருகின்ற சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் கணிப்பீட்டுச ஷ் சபைால் பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது அளவைகள் தொடர்புபட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. | விதிகளின் ˙ பிரகாரம் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,606,618 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 7,232,699 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 |
| வீதவரியும் வரியும் | 2,793 | 2,035 | 718 | 3,394 | 2,712 | 2,389 | 415 | 3,303 |
| வாடகை | 107,626 | 70,540 | 70,130 | 897 | 60,254 | 40,586 | 18,061 | 7,601 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 479 | 471 | 469 | 371 | 417 | 603 | 435 | 370 |
| ஏனைய வருமானம் | 6,082 | 4,625 | 4,093 | 1,016 | 29,253 | 31,399 | 29,946 | 2,439 |
| மொத்தம் | 116,980 | 77,671 | 75,410 | 5,678 | 92,636 | 74,977 | 48,857 | 13,713 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 968,833 தொகையான நிலுவை மதிப்பீட்டு வரி, ரூபா 235,230 தொகையான நிலுவை ஏக்கர் வரி, ரூபா 1,818,518 தொகையான நீர் வரி, ரூபா 371,000 தொகையான வியாபார வரி, ரூபா 896,657 தொகையான கடை வாடகைகள் மற்றும் ரூபா 370,500 தொகையான நிலுவை அனுமதிபத்திர கட்டணங்கள் என்பன அறவிடப்படாது இருந்தது. | எதிர்காலத்தில் சொல்லப்பட்ட தொகைகள் அறவிடப்படும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 800,665 ஆன நீதி மன்ற தண்டப்பணங்கள் மற்றும் ரூபா 3,371,623 தொகையான முத்திரை வரி என்பன பிரதம செயலாளர் மற்றும் மாகாண சபையின் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் ரூபா 547,385 ஆன முத்திரை வரி மீதி முன்னைய ஆண்டிற்குரியதாகும் | கடிதங்கள் மூலம் வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச வங்கிகளில் பேணப்படுகின்ற பிலிசறு செயற்திட்ட நிதிகளின் கணக்கு தொடர்பில் ரூபா 150,842 ஆன தொகை பயன்படுத்தப்படாது இருந்தது. | செயற்பாடற்ற இதனை செயற்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும் அல்லது சட்டரீதியாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திண்மக் கழிவு நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கூலர் இயந்திரத்தின் மோட்டர் 2021 இல் செயலிழந்திருந்ததுடன் குருசர் இயந்திரத்தின் மோட்டர் 2022 இல் செயலிழந்திருந்ததுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலீஸ் நிலையதிதின் பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு எடுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையால் பெறப்பட வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 10,861,011 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 532,310 உள்ளடக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சொல்லப்பட் பணம் அறவிடப்படும். | பெறவேண்டிய பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையால் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 18,198,767 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 3,267,698 உள்ளடக்கப்பட்டது. | எதிர்காலத்தில் பணத்தை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பணத்தை உடனடியாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் கடைசியாக வரிமதிப்பீடு செய்யப் பட்டிருந்ததுடன் புதிய வரிமதிப்பீ வருமானத்தை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வரிமதிப்பீடு மீளாய்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.. | வரிமதிப்பீடு மீளாய்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வியாபார அனுமதி பத்திரங்கள் மற்றும் வியாபார வரிகளிற்காக விசேட அளவை நடாத்தப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் தொடர்புபட்ட கட்டணங்கள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்காக அளவை மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. | நிலுவை வருமானங்களை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 42 கடைகளின் உடன்படிக்கை காலப்பகுதி காலாவதியாகி இருந்ததுடன் அந்த உடன்படிக்கைகள் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்குவதற்கு வேண்டப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவெ தொடங்கப்பட்டிருந்தது. | நாளதுவரையாக்குவதற்குட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபை தீர்மானத்தால் 13 கடைகள் கையேற்கப்பட்டிருந்தும் குத்தகைக்கு விடப்பட்டிருக்காததுடக் பிரதேச சபை வருமானத்தை இழந்திருந்தது. | பிரதேச சபையானது தற்போது குத்தகை வருமானத்தை இழந்திருந்தது. | குத்தகை அடிப்படையில் கடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,087,700 கிரயத்தில கொள்வனவு செய்யப்பட்ட உடற் பயிற்சி கட்டிட உபகரண இருப்பு 02 கட்டித்தில் உபகரணம் பொருத்தப்பட்டிருந்தும் பயன்படுத்தப்படாமல் பயனற்று இருந்தது. | வண்ணாத்திவில்ல உடற் பயிற்சி கட்டிட நிலையம் தற்போது பயன்படுத்தப் படுகின்றதுடன் காரைதீவு உடற் பயிற்சி கட்டிட நிலையம் குத்தகைக்கு விடுவதற்குகு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | உடற் பயிற்சி கட்டிட உபகரண இருப்பு மற்றும் 02 நிலைய உடற்பயிற்சி உபகரணங்கள் சாத்தியமானளவு விரைவாக பொருத்தி வருமானம் உருவாக்கப்பட வெண்டும். |
| (ஆ) | வண்ணாத்திவில்ல திண்ம கழிவு நிலையம் மற்றும் உபகரணம் பயன்படுத்தப் படாமையால் பயனற்று இருந்தது. | திண்ம கழிவு நிலையம் பராமரிக்க வெண்டிய பாதுகப்பற்ற நிலையில் இருந்தது. | அரசாங்க நிதிகளில் கட்டப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய பயனை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சுடுகாடுகள், பொது விளையாட்டு மைதானம், ஆரம்ப பாடசாலகள், நூலகங்கள், மைதானங்கள், பஸ் தரிப்பிடம், பொது மலசல கூடம் மற்றும் வாராந்த சந்தை என்பன உள்ளடங்கிய 50 ஆதனங்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உடனடியாக கையேற்கப்படும். | உரிய ஆதனத்தை உடனடியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 மூன்றாம் நிலை பதவி, 07 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 01 ஆரம்ப | எதிர்காலத்தில் இருக்கின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சபிரதேச பைக்கு தேவையான ஆளணியை சரியாக இனங்காண வேண்டியதுடன் |

| | | |
|---|---|---|
| நிலை பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. | | சொல்லப்பட்ட உழியர் எண்ணிக்கை அனுமதிக்கப்பட வேண்டும். |
| (ஆ) கடந்த ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட 10 ஊழியர்களிடமிருந்து ரூபா 393,478 ஆன மீதி பெற வேண்டியிருந்தது. | ரூபா 169,215 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது. | அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 விசேட கணிப்பீட்டு சபையால் உழவு இயந்திரம் கைதவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் இது கைதவிர்க்காமல் விடப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார் | விசேட கணிப்பீட்டு சபை பரிந்துரை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) 03 மாதங்கள் பயன்படுத்தவதற்காக 2011 ஆம் ஆண்டில் வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளரால் பிரதேச சபைக்கு உழவு இயந்திரம் மற்றும் தண்ணீர் பவுசர் வழங்கப்பட்டதுடன் சொல்லப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் தண்ணீர் பவுசர் முறையாக திருப்பி அனுப்பப்பட்டிருக்காததுடன் பிரதேச சபை வளவில் பயன்படுத்தப்படாமல் தரித்திருந்தது. | பிரதேச செயலாளரால் முறையாக திருப்பி எடுப்பதற்கு அறிவித்திருந்தார். | முறையாக திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 07 வித்தியாசமான பணிகளை நிறை வேற்றுவதற்கு ரூபா 119,595 செலவழிக்கப்பட்டிருந்த பொதிலும் குறித்த இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை | செலவழித்த தொகைக்கு நேரொத்த எதிர்பார்க்கப்பட்ட பயனை அடைய முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட வேண்டியதுடன் பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 பணிகளிற்கு ரூபா 4,600,000 ஆன தொகை ஒதுக்கப்பட்ட போதிலும் ரூபா 3,700,000 பெறுமதியான 09பணிகள் திசெம்பர் 31 வரையும் எதிர்பார்க்பபட்ட விளைவுகளை அடையாமல் கைவிடப்பட்டிருந்தது. | பணிகள் கைவிடுவதை தவிர்ப்பதற்காக சாத்தியமானளவு அதிகூடிய பயனை பெற பணிகளை ஆற்றவேண்டுமென உரிய உத்தியோகத்தர்களை வேண்டப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டியதுடன் பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைவதற்கு முயற்சிகள் செய்யப்பட வேண்டும். . |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குள் பாதீட்டு மதிப்பீடுகளில் 27 செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 1,943,000 ஆன மொத்த ஏற்பாடுகளும் உரிய பாதிடப்பட்ட நடவடிக்கைகளை நிறை வேற்றுவதற்காக பன்படுத்தப்ப்டிருக்கவில்லை. | எதிர்பாராத காரணங்களால் உரிய செயலவினங்களை செய்ய இயலாதிருந்தது. | பாதீட்டு இலக்குகளை அடையக் கூடியவாறு செயற்பாட்டு நடவடிக்கைகள திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | அதேநேரம், மீளாய்வாண்டு தொடர்பில் 25 விடயங்களிற்காக ரூபா 94,297,198 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கு குறைவானதே செலவு ஏற்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

## 4.3. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ‘‘ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பிரதேச சபையால் இனங்காணப் பட்டிருக்காததுடன் சொல்லப்பட்ட நிகழ்ச்சி நிரல் மீளாய்வாண்டில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக செயற்படுத்துவதற்கு உறுதியளிக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நிகழ்ச்சி நிரல பிரகாரம் உரிய நொக்கம் மற்றம் இலக்ககளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |